gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 43 — No. 5

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 43 | சாதாரண வைகாசி 1970 மே | இதழ் 5

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக்கூட்ட அறிவிப்பு

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் 31-5-70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக்கூட்டம், ஆண்டுவிழா முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். (செயலாளர்)

திரு. M. R. விஸ்வநாதன், பி. எஸ்ஸி. (5-நெசவுக்காரத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5) அவர்களும், திருமதி. பி. சொ. ச. சிவகாமியம்மையார் (மீனாட்சிஞான நிலையம், 44 C/2 வேளாளர் தெரு, புரசைப்பாக்கம். சென்னை-7) அவர்களும், நூலகர், கிளை நூலகம். கோவை மாவட்ட நூலகக் குழு. (திரு. வி. க. தெரு, புன்செய் புளியம்பட்டி) அவர்களும், இரா. பொன்னுச்சாமி, (ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, முருகம்பாளையம், இடுவம்பாளையம் அஞ்சல், திருப்பூர் வழி, கோவை மாவட்டம்) அவர்களும் நம்சமாஜ ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ருக்குமணி குக்கர்" உயர்திருவாளர் அ சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் சார்பில் 1—5—70 அன்று இராயப் பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் அப்பர் திருவிழா நிகழ்ந்தது. பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம் ஏ., எம். ஓ. எல். அவர்கள் "அப்பர் திருவிருத்தம்" பற்றி விளக்கிப் பேசினார்கள்.

ஆர்க்காடு வார வழிபாட்டுச் சங்க 13ஆம் ஆண்டு விழா 3—5—70 ஞாயிறன்று சிறப்புற நிகழ்ந்தது. அவ்வமயம் நம் சமாஜ சித்திரை மாத சமயப் பிரசாரக் கூட்டமும் நிகழ்ந்தது திரு. A. D தியாகராஜ முதலியார் அவர்கள் வரவேற்புரைக்குப் பின்னர் வித்துவான பாலூர் கண்ணப்ப முதலியார், எம் ஏ., எம். ஓ எல் அவர்கள் தலைமையில் திரு. பசு பால. நடராசன, வித்துவான் அம்பை சங்கரனார் முதலிய பெருமக்கள் பலர் சமய விரிவுரையாற்றினர். புலவர் கா. மு. சுந்தர உடையார் அவர்கள் நன்றியுரையுடன் இரவு 9-30க்குக் கூட்டம் இனிது முடிந்தது திரு A. M. பதுமநாபச் செட்டியார் முதலிய பெருமக்கள் பலர் முன்னின்று இச்சிவபுண்ணியச் செயலை மிகச் சிறப்புற நடத்தினர்.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைடன் நாடு.

மலர் 43	சாதாரண ஞு வைகாசி மே 1970	இதழ் 5

நீராவியான நிழலே போற்றி

ஆசிரியர்

அப்பருடைய திருத்தாண்டகத் திருமுறையில், திருக்கைலாயப் பதிகம் 'போற்றித் திருத்தாண்டகம்' எனப் படுவது. இதனுள் அவர் ஈசுவரனுடைய சர்வ வியாபகத் தன்மையை வியந்து போற்றி, அந்த வியாபக முடையவன் என்றும் என் சிந்தையினுள்ளும் கைலையிலும் இருக்கின்ருன் என்று பாடுகிருர். "என் சிந்தை புகுந்தாய் போற்றி" என்று எல்லாப் பாடல்களிலும் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே, அனைத்தையும் கடந்து நிற்கின்ற இறைவன் தமக்கு எளியனுய் வந்தமை கூறுவதே அவருடைய கருத்து என்பது தெளிவு. இவ்வாறு உடனுமாய் வேறுமாய் வியா பகமுமாய் இருப்பதற்குக் காரணம் அவனது பேருளே ஆகும். இதை அவர் பல வழிகளிலும் புலப்படுத்துகிருர். இப்பதிகத்தில் ஐந்தாம் பாடலில் இப்பேருள் தன்மையை "நீராவியான நிழலே போற்றி" என்று கூறுவதன் மூலம் புலப்படுத்துகிருர்.

'நீராவியான நிழலே போற்றி என்பதை "ஆவிநீர் ஆன நிழலே போற்றி" என்று மாற்றுக; இதை ஆவிக்கு

நீரும் நிழலும் ஆனவனே போற்றி என்று விரிக்க. உயிரை ஆவி என்று இவர் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். உலகத்திலே நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும் இருவித வெப்பங்களை வாழ்வில் அனுபவித்தே தீரவேண்டியிருக்கிறது. ஒன்று, பௌதிக வெப்பம். அதாவது சூரியனால் வரும் வெப்பம். இந்த வெப்பத்தைத் தணிப்பது நீரும் நிழலும். உடலோடு உயிர் ஒட்டியிருப்பதற்கு மூன்று தேவைகள் உள்ளன. முதலாவது காற்று. நம்மை அறியாமலேயே காற்றைச் சுவாசிக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆதலால் அதை இங்கே பேச வேண்டியதில்லை. இரண்டாவது நீர், மூன்றாவது உணவு; உணவின்றிப் பலநாள் வாழமுடியும்; பலர் அப்படியும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் நீரின்றி அப்படிப் பலநாள் வாழ முடியாது; இரண்டு நாள் மூன்று நாள் வாழ்வதே அருமை. ஆகவேதான் "நீரின்றமையா யாக்கை" என்று புறநானூற்றுக்காரர் பாடுகின்றார். நம் உடலில் மிகப் பெரும் பகுதி நீர். ஆதலால் நீரில்லாவிட்டால் உடல் இல்லை என்பது எல்லோரும் அறிந்தது. நீர்தருகின்ற காரணத்தால் தான் மேகத்துக்கு மிக்க சிறப்பு. வேத மந்திரங்களும் "ஆபோ வா இதம் சர்வம்" (இவை யாவும் நீரேயாம்) என்று சொல்லும். "தழங்கரும் தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளாய்" என்று மாணிக்கவாசகர் பாடும் போது, அமுதத்தைப் பார்க்கிலும் நீரே உய்தி தருவது என்று கூறுவது நன்கு விளங்குகின்றது.

புறத்தே உடலை வருத்துவது சூரிய வெப்பம். நம் உடல் ஓரளவுதான் வெப்பம் தாங்குமே தவிர அதிக வெப்பத்தை அதிக நேரம் தாங்காது. வெப்பத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டி, கடவுள் அவ்வெப்பத்தைத் தாங்கிக் குளிர்ந்த நிழலைத் தரும் ஆற்றலை அளித்து மரங்களைப் படைத்திருக்கிறார். மரநிழல் சூரிய வெப்பத்தால் துன்புறுவோருக்குப் பேரானந்தம் தருகிறது.

இவற்றை யெல்லாம் நன்குணர்ந்த பெரியோர்கள் நீரையும் நிழலையும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதன என்று மிகவும் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்கள். மனிதனுக்குக் கிடைக்கும் செல்வங்களுள், நீரும் நிழலும் சிறப்பானவை என்பன பாடல்களில் சிறப்பாக ஓதப்பட்டன. "நீரும் நிழலும் நிலம் பொதியும் நெற்கட்டும்......தரும் செந்த தாமரையாள்தான்" என்பது ஒரு நல்வழிபபாடல். சோனிடத்துக் காதல் கொண்ட ஒரு பெண் காதல் வெம்மையிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு வைரை வேண்டும்போது, அவர்களது அருள் தன்மையை "நீரும் நிழலும் போல் நீண்ட அருளுடைய வைரிரே என்னை உயக்கொள்மின்" என்று சொல்வதால் வெளிப்படுத்துகிறாள். இவற்றால், நீரும் நிழலும் புறவெம்மையை ஆற்றும் பொருள்களாக ஆன்றோர் செய்யுட்களில் கூறியிருப்பது விளங்கும்.

இவை போலவே ஆன்மாவுக்கும் ஒரு வெம்மை உண்டு. இது இரண்டாவது வெப்பம். பிறப்பு இறப்பு என்ற சூழலில் சிக்கி, வினைவசத்தால் அலைசலாடுவதே அந்த வெப்பம். வெய்யவினை என்றே ஆன்றோர்கள் சொல்லுவார்கள். இந்த வினையிலிருந்து காப்பன இறைவனது கழல்கள். கழல்கள் நீரும் நிழலும் தந்து உதவுகின்றன என்பது அப்பர் கருத்து. நீராவது இறைவனது அருள். நிழலாவது அவனது திருவடி நிழல். அருளாகிய நீரைப் பருகு முன்னமே இருவினைகள் அனுபவித்துக் கழிகின்றன. மலம் பரிபாகம் அடைகின்றது. அந்த நிலையில் ஆன்மா அருளைப் பெறுகிறது; அதாவது அருள் நீரைப் பருகுகிறது. இது சத்திநிபாதம்: உடனே கூடுவது இறைவனது திருவடி நிழலில் தோய்வு. அதாவது, சிவத்தில் இரண்டறக் கலத்தல். நீரும் நிழலுமே சத்திநிபாதமும் அத்துவிதக் கலப்புமாக முறையே உணர்த்தப் படுகின்றன.

இக்கருத்து அப்பர் சுவாமிகளுக்கு மிகவும் பிடித்தமான ஒருகருத்து. அப்பர் சுவாமிகள் நீரையும், நிழலையும் பல

தடவைகளில் குறிப்பிடுகிறார். அவற்றுள் சில எடுத்துக் காட்டும்முன், இவர் அவற்றைக் கூறுவதில் உள்ள ஒரு பொருத்தத்தையும் காட்ட எண்ணுகிறோம். அப்பர் வேளாளர், புறப்பொருளாகிய நீரையும் நிழலையும் நன்கறிந்தவர். நீரை நன்கு பயன்படுத்துபவர், நிழலைப் படைப்பவர்; ஆதலால் நீரும் நிழலுமே இறைவன் அருள் விளையாட்டின் வெளிப்பாடுகள் என்பதை அவர் நன்குணர்ந்து குறிப்பிடுகிறார்.

நீராகி நெடுவரைக ளானான் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பு மானான் கண்டாய்
பாராகிப் பெளவமே மானான் கண்டாய்
பாலாகி வானாகி நின்றான் கண்டாய்
ஆரேனுந் தன்னடியார்க் கன்பன் கண்டாய்
அணுவாகி ஆதியாய் நின்றான் கண்டாய்
வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் றானே.

என்பது மழபாடித் திருத்தாண்டகம். அதேபோல இறைவன் பிரபஞ்சத்தில் எல்லாம் தானே ஆகி நிற்கின்றான் என்பதை உணர்த்துகின்ற நின்ற திருத்தாண்டகத்தில் ஒன்பதாம் பாடலையும் காண்க:

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள் விசும்பினுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெரு மதில்கள் மூன்றினையு மெய்தானாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே.

இரண்டு தாண்டகப் பாடல்களிலும் அவர் சிவபெருமான் நீரும் நிழலும் ஆகிய தன்மையை, நன்கு தோய்ந்து குறிப்பிடுகின்றார். இதனோடு இவ்விரு பாடல்களிலும் காணப்படுகின்ற மற்றொரு குறிப்பும் காணத்தக்கது. இரண்டிலும்

"ஆரேனும் தன்னடியார்க்கு அன்பன் கண்டாய்" என்றும் "ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ள வல்ல எம் ஈசனார்" என்றும் சொல்கிறார். இவ்வாறு இரண்டு இடங்களிலும் ஒரே குறிப்பைச் சொல்வதனால், அவர் நன்றாக இப்பொருளைச் சிந்தித்தே சொல்கின்றார் என்பதும் உணரத்தக்கது. தன்னை யடைந்தவர்களுக்கு இறைவன் அருள் செய்கின்றான் என்பதும் நீரும் நிழலுமாக அவ்வருளை உணரலாம் என்பதும் அவரது கருத்துக்கள்.

இவையன்றி, வேறு வகையிலும் இத்தொடருக்குப் பொருள் சொல்வாரும் உளர். சிவஞான போதம் எட்டாம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் வரும் "இல்லாமுலைப் பாலும்" என்ற உதாரண வெண்பாவில் உள்ள "நீர் நிழல் போல் இல்லா அருவாகி நின்றானை யார் அறிவார்" என்ற தொடரை எடுத்துக் காட்டி ஒரு குறிப்புரையானது நீரின் கண் ஆவியாயும், நிழலாயும் உள்ளவனே என்று அப்பர் திருத்தாண்டகத் தொடருக்கு உரைகூறுகிறது. "நீராவி நீரினின்றும் வெப்பத்தால் எழுகின்ற ஆவி. நீரினுள் நிழலாவது நீர் வாழ் உயிர் முதலியவற்றின் நிழல்." இவ்விடத்தில் சிவஞான சுவாமிகள் பாடியத்தில் எழுதும் உரை பின் வருவது. "நீர் அகத்தியங்கும் உயிர்கட்கு இடங்கொடுத்த லுண்மையான், நீரின் கண் வெளியுண்டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழலுண்டென்பதூஉம் பெறப்பட்டன. அந்நிழல் வேறு நில்லாது நீரின்கண் விரவி நிற்றலின், நீர்போலப் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதன்னியமும் யானெனும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்ம சைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென்பார், நீர் நிழல் போல் உற்று இல்லா அருவாகி நின்றானை என்றார்" இக்கருத்தை இங்கு நாம் ஆராயவில்லை. ஆனால் அப்பர் தேவாரத்திற்கு இவ்வளவு சிரமப்பட்டுப் பொருள் காணவேண்டாப; இவ்விடத்துக் காணப்படும் உவமை அப்பர் தேவாரத்துக்குப் பொருந்தவும் இல்லை என்றே குறிப்பிட விரும்புகின்றோம். மேலே

காட்டியபடி எளிதாகவே பொருள் பண்ணிக் கொள்ளலாம். மேலும் இங்கு சிவஞானபோத வெண்பாவில் உள்ள உவம உருபு இல்லை, இங்கு உவமையும் இல்லை.

இதுகாறும் கூறியவற்றால் நீராகியான நிழலே போற்றி என்ற தொடரை நேர்முகமாய் எளிதாகப் பொருள் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பதும், ஆவிக்கு நீரும் நிழலும் ஆன பெருமானே போற்றி என்பதே கருத்தென் பதும் தெளிவாகும். நீரும் நிழலும் உடலுக்கும் உயிருக்கும் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை இது வரை விளக்கிக் கூறினோம்.

(குறிப்பு) "ஊராகி நின்ற உலகே போற்றி" என்பது பற்றி அடுத்த இதழில் வெளிவரும். (ஆசிரியர்)

தலப்பகுதி :-

திரைலோக்கிய சுந்தரம்

(மு. அ.)

இது கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடிய பத்துத் தலங்களில் ஒன்று. இக்கோயில் முதலாம் இராசராச சோழனுடைய தேவியருள் மூன்றும் தேவியாகிய திரை லோக்கிய மாதேவி கட்டியது; ஆகவே இப்பெயர் ஏற்பட் டது. கருவூர்த்தேவர் திரைலோக்கிய சுந்தரம், தஞ்சை இராசேச்சுரம் கங்கை கொண்ட சோழேச்சுரம் ஆகிய மூன்று கோயில்களும் கட்டிக் கும்பாபிஷேகம் செய்த காலத்து உடனிருந்து திருவிசைப்பாப் பாடினாரென்று நினைக்கவேண்டியிருக்கிறது; இவர் பாடிய களந்தை ஆதித் தேச்சுரம், ஆதித்த சோழன் கட்டியது; இவர் காலத் துக்கு நெடுநாள் முந்தியது.

இடம்: பாடல் பெற்ற தலமாகிய திருப்பனந்தாளி லிருந்து ஆடுதுறைப் பாதையில் ஒரு பர்லாங் தூரம்

தெற்கு நோக்கிச் சென்று, அவ்விடத்திலிருந்து, திருலோக்கி என்கின்ற ஊருக்குச் செல்லும் தனியான கப்பிச் சாலையில் மூன்று மைல் தூரம் சென்றால் திருலோக்கி என்ற ஊரையடையலாம். ஊரின் மத்தியில், இச் சாலைக்கு மேற்காகக் கோயில் சில கஜ தூரத்தில் உள்ளது. சந்நிதி வீதிக்குக் குறுக்காக இச்சாலை செல்கிறது. சந்நிதியில் நான்கு பிராமணர் வீடுகளே உள்ளன. வேறு பிராமணர் இங்கு இல்லை. ஊர்நத்தம் பெரிதாக இருக்கிறது. ஆனால் செழிப்போ பிரகாசமோ இல்லை. ஒரு காரணம், சாலையின் மோசமான நிலை. நடந்து போனால்தான் எளிதாகச் செல்லலாம். வேறு எந்த வாகனமும் கோடையில் கூடச் செல்வது அரிது; இரட்டை மாட்டுக் கட்டை வண்டி போகும்.

பெயர்: திருலோக்கி என்று வழங்குகிறது. இது திரைலோக்கிய சுந்தரம் என்ற பெயரின் திரிபு இப் பெயரின் காரணம் முன்னே சொல்லப்பட்டது. கருவூர்த் தேவர், 'கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' எனறே எல்லாப் பாடல்களிலும் சொல்கிறார். கோடை என்பது கோட்டூர்; பக்கத்தில் இரண்டு மைலில் உள்ளது. அது சற்றே செழிப்புடைய தனி ஊர். ஒரு காலத்தில் இரண்டும் சேர்ந்து பெருநகராயிருந்தனபோலும். இதுபற்றிப் பின்னே குறிப்பிடுவோம். சுவாமி பெயர் சுந்தரேசர்; தலப்பெயரில் சுந்தரம் என்ற சொல் அமைந்தது இதனால் ஆகும். அம்பிகை அகிலாண்டேசுவரி. தலவிருட்சம் சரக்கொன்றை. அம்பிகை தவம் புரிந்து திருக்கல்யாணம் செய்துகொண்ட தலமெனத் தெரிகிறது.

கோயில்: பெரிய கற்கோயில். கிழக்கு நோக்கிய சந்நிதி. கோபுரமில்லை. விசாலமான செங்கல் தள வரிசை உள்ள பிரகாரம். பெரிய மதில் சுவர். கீழ்ப்பாதி கருங்கல், மேல்பாதி செங்கல். விசாலமான தனிக்கல் மண்டபம் முன்புறம். அடுத்து உள்ளதே மகா மண்டபம். தென்கிழக்கு மூலையில் தெனசுவரை ஒட்டினாற்போல் மடைப்பள்ளி. அங்கு சில கற்கள் கல்வெட்டோடு உள்ளன. ஒரு காலத்தில் இதன் சுவரை அடுக்கியபோது கல்வெட்டுள்ள

கற்களை இங்கு எடுத்து வைத்துவிட்டார்கள் போலும். மேல்புறம் நீண்ட வெளவால் நெற்றி மண்டபம்- இதில் நீண்ட தாழ்வாரம் வெளவால் நெற்றி மண்டபமாக நீளம் முழுமையும் உள்ளது. முன் மண்டபம் வெளவால் நெற்றி. அடுத்துள்ள மண்டபம் கல் பாவியது. சுவாமிக்கு வெளிப்புறத்தில் மண்டபத்துக்குள்ளேயே அம்பிகை கோயில் உள்ளது. கோயிலுக்கு எதிரே சந்நிதி வீதியின் கிழக்குக் கோடியில், கோயிலை நோக்கியவாறு விநாயகர் கோயில் தொலைவில் உள்ளது.

மூர்த்தி : மூலவர் மிகச் சிறிய திருவுரு, அருகிலிருக்க வேண்டிய போக சத்தி நின்ற கோலம், உற்சவரோடு வைக்கப்பட்டுள்ளார். உள்வாயிலில் நடுத்தரமான நாலு கையுடைய கல் துவாரபாலகர். வெளிவாயிலில் சுதையில் பெரிய துவாரபாலகர். உள் மண்டபத்தில் சந்நிதியில் விநாயகர். இவருக்குத் தெற்கே அம்பாள் கோயில். அம்பாள் நடுத்தர உரு. எதிரில் இடபம். மகாமண்டபத்தில் தென்புறமும் வடபுறமும் உள்ள இரு மூர்த்தி வடிவங்கள் மிகச்சிறப்புடையவை.

தென்புறம் ரிஷபாரூட மூர்த்தி. சற்றே பிற்காலச் சிற்பம்போலும். மிகவும் திருத்தமாயுள்ளது. மிகவும் புதுமையான அமைப்பு, நடுத்தர வடிவமான ஓர் இடபம். இடபத்தின்மீது கல் விமானம்; திருவாசிகையுடன் கூடியது. இதில் தேவர்கள் பலர் வாத்தியம் வாசித்துக் கொண்டும் குழல் மத்தளம் வாசித்துக் கொண்டும் பிறவாறும் இருக்கிறார்கள். சிவபிரானும் உமாதேவியும் விமானத்தில் உள்ளனர். பெருமான் அம்பிகையை இடக்கையால் தழுவிய கோலம். அதற்கேற்றவாறு இருவர் உருவமும் குழைந்துள்ளன இந்த வடிவத்தின் பின்புறம் சிவலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது இவையாவும் ஒரு கல்லில்-இடபம், விமானம், மூர்த்திகள்-எல்லாம் சேர்ந்து நான்கடி உயரமிருக்கும். இத்தகைய ஒரு வடிவம் வேறெங்கும் காணப்படாதது. இம்மூர்த்தி முதல் மண்டபத்தில் இருந்தவர்; இவர் இங்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறார்; வடக்கு நோக்கிய நிலையில் உள்ளார். இவருக்கு இடப்புறம் உயரமான ஒரு குருபகவான் தனியே உள்ளார்;

நின்ற கோலம்; இடக்கை செபமாலை; வலக்கை சத்தி வேல் போன்ற ஒரு சூலாயுதம்; அபயகரமும் தொடையில் அமைந்த இடது கரமும் உள்ளன.

சந்நிதிக்கு வடப்புறம் பெரிய வடிவினரான ஆலிங்கன மூர்த்தி (கலியாண சுந்தர கோலம்) நாலரை அடி உயரமுள்ள மூர்த்தி இடக்கையால் அம்பாளைத் தழுவியிருக்கிறார். அம்பாள் வலக்கையால் சுவாமியைத் தழுவியிருக்கிறார். தழுவுதலுக்கேற்ற நெளிவுகள் இருவர் திருமேனியிலும் காணப்படுகின்றன. இந்த உயரத்துக்கு மேற்பட்டது அலங்காரத் திருவாசிகை; திருவாசியினடியில் சுவாமி பக்கம் ஒரு தேவனும் அம்பிகை பக்கம் ஒரு சேடியும் உள்ளனர். இவ்வளவும் ஒரே கல்லில் அமைந்துள்ளது மிகவும் ஆச்சரியமான முறையில் உள்ளது. இம்மூர்த்தி இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கத் தக்க பொலிவு வாய்ந்தவர். இந்தக் கோலம் கல்லில் வேறெங்கும் காண்பதற்கில்லை. இக்கோயில் தஞ்சை இராசராசேச்சுரம் கட்டப்படுவதற்கு முன் செய்திருக்க வேண்டும். வேலை செய்த சிற்பிகள், அப்போது வேலை நடந்துவந்த இராசராசேச்சுரத்திலும் சிறப்பாக இங்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற நினைவு உந்த இவ்வடிவம் செய்தார்கள் என்றெண்ணத் தோன்றுகிறது.

தென்கோட்டத்தில் கரைந்து போன ஓர் அம்பிகை சும்மா வைக்கப்பட்டுள்ளார். அடுத்து தக்ஷிணாமூர்த்தி முன்புற மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. நிருதி மூலையில் நால்வர் பெரிய வடிவங்கள், அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்ற வரிசையில்; நிருதி விநாயகர், முருகன் தேவியரோடு சிறிய வடிவம்; மேல்புறக் கோட்டத்தில் லிங்கோற்பவர், பிரம விஷ்ணுக்கள் அருகில். இவருக்கு மேலே விமானத்தில் திருமால் ஆதிசேஷனின் கீழ், தேவியரோடு; வாயுமூலையில் கஜலக்ஷ்மி. ஓர் அம்பிகை வடிவம் பின்னம். அடுத்து முழுமையும் பொரிந்து போன விநாயகர். வடகோட்டம் கோமுகையின்மீது பிரமன் அமர்ந்த கோலம், புதுமையாகவுள்ளது. அடுத்து ஒரு கோட்டத்தில் ஓர் அம்பிகை பழைய காலத்து

வடிவம், பின் சண்டேசர் கோயில், அங்கு பெரியவரும் சிறியவருமான இருவர். துர்க்கை மகிடத்தின் மீது, சனி மூலையில் சிறியதும் பெரியதுமாக பைரவர் மூன்று வடிவங்கள்; பெரிய வடிவம் அழகானது. அடுத்துத் தனியான பிக்ஷாடன மூர்த்தி நல்ல வடிவம் பின் சூரியன், இரண்டு வடிவம். இங்கு நவக்கிரகமும் இல்லை, தனியான சனியும் இல்லை.

உற்சவர்: எல்லா மூர்த்திகளும் உள்ளனர். நடராசர், அம்பிகை, சிறிய வடிவங்கள்; பிரகாசமுடையவை. 27 சுடர் கொண்ட திருவாசிகை, நால்வர்; கூத்தாடும் சம்பந்தர் பழையவர், ஏனையோர் பெரிய வடிவங்கள், புதியவை. போகசத்தி உற்சவர்களோடு உள்ளார். சோமாஸ்கந்தருக்குத் திருவாசி இல்லை. முருகன் தேவியரோடுள்ளார். சண்டேசர் பழைய சிலை. பிறர் அனைவரும் உள்ளனர். தனியான மற்றோர் அம்பிகையும் உள்ளார்.

பாடல்: கருவூர்த் தேவர் திருவிசைப்பா, ஐந்தாவது தலம் திரைலோக்கிய சுந்தரம்; அகத்துறைப் பதிகம், 'கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' என்றே பாடுகிறார். கோடை - கோட்டூர்; அருகிலுள்ளது; இரண்டு மைல் தெற்கே.

விழா: அம்பிகை தவம் செய்து திருமணம் கொண்டருளிய தலம் போலும். அம்பிகை கிழக்கு நோக்கி, தென் புறத்தன் கோயிலில் இருத்தலால் இது தெரிகிறது. உற்சவம் உண்டு.

வரலாறு: முன் சொல்லியது போல், இது இராசராசன் தேவியான திரைலோக்கிய மாதேவி கட்டிய கோயில். தஞ்சை கும்பாபிஷேகம் 1010இல், 1012இல் இராசராசன் தன மகனுக்குப் பட்டம் கட்டிப் பின் 1014 இல் காலமானார். ஆகவே இது 1010க்கு முன் கட்டி முடித்திருக்கலாம் என்று கருதுமாறு உளளது. (சுமார் கி. பி. 1000).

கல்வெட்டு: தென்புறம் வடபுறங்களில் காணப்படுகின்றன. இவ்விடம் வருதராச பயங்கர வளநாட்டு

மண்ணி நாட்டு ஏம நல்லூர் என்று சொல்லப்படுகிறது. எச்சிலி இளமர் ஏமநல்லூர் என அப்பர் குறிப்பிட்ட வைப்புத்தலம் இதுவே போலும். மண்ணி நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கியமாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்பது இதன் முழுப் பெயர். பூமருவிய பொழிலேழும் பொருப்பேழும் என்று தொடங்கும் II இராசராசன் கல்வெட்டும் உள்ளது. இந்நகரின் ஒரு பகுதி இராச திவாகர நல்லூர் என்ற பெயர் பெற்றிருந்தது. இவனது மூன்றும் ஆட்சியாண்டில் நகரைச் சேர்ந்த நிலங்கள் தேவதானம் பிரமதேயம் பள்ளிச் சந்தம் என்பவை முதலாகப் பாகுபாடு செய்து ஒழுங்கு பண்ணப் பட்டன. கணிதபட்டி என்பான் கட்டிய பரசுராமீசுவரமுடையார் கோயிலில் திரிபுவன சுந்தரன் தக்ஷிணாமூர்த்திபட்டன் என்பவனுக்கு அம்பிகை பூசா உரிமை ஒழுங்கு செய்யப்பட்டது. இங்கு அவன் அந்தி தீபத்துக்காகப் பொருள் வழங்கினன். மார்கழி விழாவில் அரசனுடைய நன்மைக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் பூசைக்கு வேண்டி வரகுணப் பெருமான் என்பவரால் நிலதானம் செய்யப்பட்டுள்ளது. திருச்சிற்றம்பலமுடையார், சம்பந்தப்பெருமாள் என்போர் கட்டிட தானம் செய்தார்கள்.

கைலாய நாதர் கோயில்: பெருங்கோயிலுக்குக் கிழக்கே 2 பர்லாங் தூரத்தில் இக்கோயில் காணப்படுகிறது. சுற்றுக் கோயில்கள், மண்டபங்கள், சுவர்கள யாவும் இடிந்து மண்மேடிட்டுக் கிடக்கின்றன. இடிந்த அடையாளங்கூட இல்லாமல் எல்லாம் மறைந்துபோய் விட்டன. மிச்சமிருப்பது கருவறையும் விமானமும்தான். மிக உயரமான செங்கல் விமானம். ஏராளமான அரசு நுணா மரங்கள் அதன்மேல் முளைத்து வேர்விட்டிருக்கின்றன. இன்றே இவற்றைக் களைந்து காபாற்றினால், மிச்சமுள்ள கோயிலாவது பிழைக்கும். இல்லையானல் விழுந்துவிடும். விமானம் அழகாகக் கம்பீரமாக நிற்கிறது. எல்லா விமானங்களையும் போல உள்ளே கூடாக உச்சிவரையில் தெரிகிறது. இது இவ்வாறு செங்கல்லால் ஒட்டிய கட்டிடக் கலையே அற்புதமானது இப்படிப்பட்ட கலைகளையெல்லாம் கவனிப்பில்லாமல் அழியவிடுவதும்

அழிப்பதும் இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழன் ஒருவனுக்கே சாத்தியம். பிறர் யாருக்கும் இப்படி அழிய விடத் தெரியாது.

உள்ளே பெரிய மகாலிங்கம், ஆவுடையார் ஆறடிக் குறுக்களவு உடையவர். எதிரில் இடபம். நிருதி விநாயகர், வாயுமூலையில் தனியான லக்ஷ்மி, சண்டேசர் சடையோடு உளளார். இவர்கள் வெளியே கேட்பாரற்றுக் கிடந்து உள்ளே கொண்டு வந்து வைக்கப்பட்டனர் என்பர். கீழே கல்தளம். கோயில் அடிப்பீடம் அதிக உயரம். எல்லாம் பெரிய கற்கள். மூன்று புறமும் பழைய எழுத்துக் கல்வெட்டுக்கள். விருதராச பயங்கர வளநாட்டு மண்ணிநாடு என்று காணப்படுகிறது. வெளியில் ஒரு சண்டேசரின் வடிவம் கேட்பாரற்றுக் கிடக்கிறது.

நிர்வாகம் : இந்தக் கிராமமும் சுற்றியுள்ள பல கிராமங்களும் முழுமையும் திருப்பனந்தாள் காசி மடத்துக்குச் சொந்தமானது. பெரிய கோவில் நிர்வாகத்தை மடத்திலிருந்து வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள். கைலாயநாதர் கோயில் இவர்கள் வசமிருக்கிறது இதை இவ்வாறு மேலும் இடியவிட்டிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. கங்கைகொண்ட சோழன் கங்கை நீர் கொண்டு வந்ததை அவன் காலக் கல்வெட்டு ஒன்று சிறப்பிக்கிறது. பின்னும் இரு கல்வெட்டுக்கள் திருவிளக்குக்காகக் காசுதானம் செய்தமை பற்றிக் கூறுகின்றன.

பெருமாள் கோயில் : ஊருக்குத் தெற்கே தனியே ஒரு பெருமாள் கோயில் உள்ளது. நல்ல கோயில. எதிரில் திருக்குளம். ஒரு காலத்தில் படித்துறைகள் இருந்து இடிந்துபோய்விட்டன. ரங்கநாதர் பள்ளிகொண்ட பெரிய திருவுருவம. நாபிக் கமலத்தில் பிரமன், ஸ்ரீதேவி, பூதேவி, ஆதிசேஷசயனம். திருநாமம் க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள், உற்சவரும் அதே பெயர். வாயில் வடபுறம் விஷ்வக்சேனர், நரசிம்மர், அனுமார்; இடப்புறம ஆழ்வார்கள் அனைவரும், ஆண்டாளும் அடுத்து மூலவரும்; புதிய பிரதிஷ்டை. தனியே வாயிலில் தெற்கு

நோக்கி வைஷ்ணவி; வழக்கம்போல் தெற்கில் தாயார் சந்நிதி, ஸ்ரீநாயகி, மூலவரும் உற்சவரும். அதன் வடபுறம் ஆரம்பப்பாடசாலை.

தஞ்சைப் பெருங்கோயிலுக்கு முன் எழுந்த கோயில் என்பதற்காகவும், முன் குறிப்பிட்டபடி அமர்ந்த கோல முடைய பிரமன், ஆலிங்கன மூர்த்தி, கல்லிலான இடபா ரூட மூர்த்தி என்ற வடிவங்களுக்காகவும் சிறந்தலம் தரிசிக்கத் தகுந்தது.

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணீரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

என்பது கருவூர்த்தேவருடைய திருவிசைப்பாப் பதிகத்தின் முதல் பாடல்.

சரித்திர சம்பந்தமான ஒரு குறிப்பு இங்குச் சொல்ல வேண்டும். மாணிக்கவாசகர், திருவாசகத்துள், 'இடைவைமட நல்லாட்குக் கருணையளிக்கும் திறம்' என்று குறிப்பிடுகிறார். (590) இவ்விடைவை அவர் காலத்தில் ஒரு போர்க்களமாயிற்று. இங்கு வரகுண பாண்டியன் ஆதித்த சோழனைத் தோற்கடித்துச் சில காலம் தங்கியிருந்தான். இடைவை எது என்பது இன்னும் தெளிவாகவில்லை. இருப்பினும் திருலோக்கிய சுந்தரம் அருகே உள்ள இடையானூர் என்ற சிற்றூர் இடைவையாயிருக்குமென்று தெரிகிறது. இது பெருநகரம்; கோட்டூர், திரைலோக்கிய சுந்தரம், இடையானூர் யாவும் சேர்ந்த பெருநகரம். இப்பொருள் பின்னும் ஆராய்ச்சிக் குரியது.

சைவா ஓலம்! சைவமே ஓலம்!

சிவசங்கர தேசிகன்.

சைவத்தின் பெருமை:

"தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்
தமிழ்மொழி வீழ்ந்தால் தமிழர் வீழ்வர்"

என்ற கருத்து எவ்வளவு பொருளுடையதோ அதுபோல சைவம் வாழ்ந்தால் சைவர் வாழ்வர்; சைவம் வீழ்ந்தால் சைவர் வீழ்வர் என்ற கருத்தும் பொருளுடையது ஆகும். தமிழர்கள் எல்லோரும் சைவரல்லர்; சைவர்கள் எல்லோரும் தமிழர்கள் அல்லர் என்றாலும் நமக்குத் தெரிந்தவரையில் சைவர்கள் பெரும்பாலும் திருநெறிய தமிழ்த் திருமுறைகளையே அடிப்படையாகக் கொண்டு வாழும் மெய்த் தமிழர்களே யாவர். கண்ணுதற் பெருங்கடவுளும் கழகத்தில் அமர்ந்து ஆய்ந்த பசுந்தமிழ்மொழி சில இலக்கண வரம்பிலா மொழிகளைப்போலவோ அவற்றோடு ஒன்றாகவோ வைத்து எண்ணப்படும் தகைமையது அன்று என்றார் பரஞ்சோதி மாமுனிகள். இக்கூற்று சைவத்துக்கும் முற்றிலும் பொருந்தும் பெற்றிமை உடையது. சைவசமயம் சமயாதீதம். அது மற்ற சமயங்களோடு ஒன்றாக வைத்து எண்ணும் நிலையிலில்லை. அறவொழுக்கமும் மெய்ப்பொருளறிவும் ஒருங்கே இணைந்து இயன்ற ஒரு வாழ்வியலமைப்பே சைவசமயமாகும். இச் சைவ சமயத்திற்கு மேலாகக் கூறும் தகைமையில் வேறு சமயம் இல்லை என ஆன்றோர்கருதுவர். இச்சைவத்தைப் பல சமயங்களில் ஒன்றாகவைத்துக் கருதப்படாது. தனக்கெனத் தனிச்சிறப்பும் தனி வரலாறும் கொண்டு தமிழ்நாட்டின் பண்பாடாக விளங்குகிறது சைவசமயம்.

புராணங்களில் சைவம்:

அன்றாட வழிபாட்டில் பெருவாரியாக 'சைவம் வாழ்க' என்ற கருத்தமைந்த புராணப் பாடல்களே பாடப்பெறு

கின்றன. அவற்றுள் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கோயிற்புராணம் ஆகியபுராணங்களின் வாழ்த்துப் பாக்களில் சைவம் வாழ்க என்ற குறிப்பு வலுப்பெற்றிருக்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று கந்தபுராணத்திலும்,

"நான்மறைச் சைவம் ஓங்கிப் புல்குக உலகமெல்லாம்" என்று திருவிளையாடலிலும்,

"பழைய வைதிக சைவம் பரக்கவே"
என்று கோயிற்புராணத்திலும் வரும் சொற்றொடர்கள் சைவம் தழைக்கவேண்டும் என்ற உணர்வை நம்மில் எழுப்புகின்றன. கச்சியப்ப சுவாமிகள் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக" என்றார். முனிவரரோ சைவம் ஓங்கிப்புல்குக—தழைத்தோங்கி என்றும் நிலைபெறுக என்று கூறினர். இவர்கள் இப்படி உணர்ச்சி கொப்புளிக்கச் சொல்லியபடி சைவம் என்றும் நிலைபெற்று விளங்க வேண்டுவதேயாம். அது புறச்சமயிகளினின்றும் திருஞானசம்பந்தமூர்த்தி போன்ற சைவ ஞானக்கன்றுகளால் காத்து நமக்களிக்கப் பட்ட பெருமையுடையதாகும். எனவே அதன் அருமை பெருமைகளை ஓர்ந்து அதுதழைக்க ஒவ்வொருவரும் "சைவம் வாழ்க! சைவம் வாழ்க!" என்று சொல்லிப் பிறரையும் சொல்லச் செய்தல் அவசியம் அன்றோ? நம் தமிழ்த்தாய் நாட்டில் சைவம் வேரூன்றிப் புல்கினல்தான் நம் நாட்டில் நமக்கு உரிமையிருக்கும்; பிற நாட்டில் நமக்குப் பெருமையும இருக்கும்.

சைவத்தின் நிலை :

ஆனல் இன்று சைவத்தின்நிலை, அரசியற் கட்சிகளாலும், அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தாலும், நாகரிகம் என்ற பெயரில் மேனட்டுப் பழக்கவழக்கங்களைப் பேணும்

நிலை யிருவதாலும், இன்னோன்ன பல காரணங்களினாலும் ஓரளவு நாளுக்குநாள் பாதிக்கப் பட்டு விட்டது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இன்று, ஒருத்துவரைப் போல மேனாட்டில் சென்று நம் சாத்திரத்தோத்திரப் பெருமைகளை எடுத்துச் சொல்லி, மேலும் அவர்களுக்குக் கல்வி மருந்து போன்றன அளித்து சைவத்தைப் பரப்புதல் என்பது நம்மனோரால் இயலவில்லை. அப்படியே செய்தாலும், அவர்கள் நம்மைப் போல் விரைவில் மதம் மாறுவதுமில்லை. அதனால் அவர்களை நம் சமயநெறிக்கு ஈர்க்கமுடிவதில்லை. ஆனால் நம்நாட்டிலோ பல மேனாட்டுச் சமயத்தவர்களும் நம்மை விரைவாக அண்டிச் சூழ்நிலைகளைப் பயன் படுத்திக் கொண்டு தத்தம் மதங்களை வேரூன்றச் செய்து விட்டனர். எனவே ஒரு வகையில் இங்குள்ள புறச்சமயிகள் அத்தனைப்பேரும் ஆதியில் சைவர்களாகவே இருந்தனர் என்று துணிதற் கிடமுண்டு. எனவே இந்நிலையில் வெளிநாடுகளிலும் சைவம் பரவவில்லை. நம்நாட்டிலும் சிறப்பாக விளங்க வில்லை என்றால் பெருமைக்குரிய சைவத்தின் நிலைதான் என்ன ?

ஒருகருத்து : மொத்தத்தில் தமிழ்மக்கள் என்ற தொகையில் தமிழ் அந்தணர்கள் (பார்ப்பனர்கள்), வைண வர்கள், சைவர்கள் என்ற பெரும் பிரிவுகள்தாம் உண்டு. தமிழ் அந்தணர்கள் ஸ்ரீ சங்கராசாரியாரின் கருத்துப் படியே வாழ்ந்து வருபவர்கள். வைணவர்கள் தம் மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். எனவே மதமாற்றமடைந்து சென்ற அத்தனைப்பேரும் நம் சைவர்களே ஆவர். இந்நிலை யில் நம்மைப்பற்றி நமக்கு நம்பிக்கைகுறைய நம்மையேநாம் இழக்கத் தயாராகி விட்டோம். இதற்கெல்லாம் காரணம் சமய சமரசமே என்று கூறுவது பொருந்தாது.

சைவா ஓலம்! சைவமே ஓலம் :

இந்நிலையில்—அரசியல் கட்சிகளாலும், அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தாலும், நாகரிக வளர்ச்சியாலும்

இன்னோன்ன பலகாரணங்களாலும் சைவம் பாதிக்கப் பட்டு இருக்கிற இந்நிலையில் நம்மவர்களுக்குள்ளேயே பூசல் எழுவதால் நாம் ஒருவர்க்கொருவர் இணக்கமின்றிப் பிணங்கி வெறுவேறு திசையில் சென்று கொண்டிருக்கிறோம். இந்நிலையில் சைவம் என்ற ஒன்று என்றும் வாழ வேண்டுமே என்று எண்ணும்போது நாம் தனுக்குற்று சைவா ஓலம் சைவமே ஓலம் என வாய்விட்டு இரைய வேண்டியிருக்கிறது.

வளர்ந்து வரும் பிரச்சினைகள் :

நம் சமய வளர்ச்சியில் மொழிக்கோட்பாடும் சாதிவேறுபாடும் இப்போது இருபெரும் பிரச்சினைகளாகி விட்டன. சைவத்தில் சாதி வேறுபாட்டைவிட மொழிப்பிரச்சினை தான் நம்மை இப்போது அல்லற்படுத்துகிறது. வடமொழியில் தேர்ச்சி பெற்ற சைவர்கள் ஒருபுறம்; சிவத்தோடு தமிழின்பத்திலும் தோய்ந்துவிட்ட சைவர்கள் மற்றொரு புறம்; இவர்களைக் கருவியாகப் பயன் படுத்திக் கொண்டு சமயத்திற்குப் புறம்பான மொழிவெறியைச் சமயத்தில் புகுத்தும் மக்கள் ஒருபுறம். ஆகவே பொது மக்கள் கடலலையில் அகப்பட்ட மரக்கட்டையைப் போலத் துன்புறுகிறார்கள்.

அவர்களுடைய பிணக்குகளில் ஒரு எடுத்துக்காட்டு "வடநூல் மூலமா?" "தமிழ்நூல் மூலமா?" என்பது குறித்து இருசாராரும் ஒரு நூலைப் பற்றி ஆராய்ந்து வாதிடுவதாகும். மற்றொரு எடுத்துக்காட்டு: "திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு வழிபடுபவர் ஒருவர்க்கும் புரியாத ஆகம வேதங்களைச் சொல்லுதல் வேண்டுமா? அல்லது நம் மொழியில் இயன்ற திருமுறைகளை ஓதவேண்டுமா?"

இவைபோன்ற பிரச்சினைகள் இப்போது நன்றாக உருப்பெற்று வளர்ந்து விட்டன. சமயம் என்பது எல்லா மக்களுக்கும் பெருமை தரத்தக்க பொது உடைமை ஆமைப்பாகும். இங்கு இதன் வளர்ச்சிக்கே பாடுபட்டு உழைத்த

மக்கள் தமிழ்மக்கள். இந்தத் தமிழ் மக்களின் விருப்பத்தையும் ஒருசாரார் புறக்கணிப்பது போற்றுதற்குரியதன்று எனத்திட்டவட்டமாக இடித்துரைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். "தமிழ் நாட்டில் தமிழ்தானில்லை" என்று ஒரு தற்காலப் புலவர் பாடினார். அது உண்மையென்பதே பலவாற்றானும் பெறப் படுகின்றது. திருக்கோயில்களில் தமிழ் இடம் பெற்றேதீரவேண்டும். அப்போதுதான் பெருவாரியான தமிழ்ச் சைவர்களை அமைதிப் படுத்தி மீண்டும் அவர்களைச் சமயத்துறையில் ஊக்குவிக்கமுடியும்.

மொத்தத்தில் எல்லார்க்கும் ஒன்று உரைக்க வேண்டும். மொழி அளவிலேயே மக்கள் மனத்தைவளர்த்து விடக்கூடாது. ஒருமொழி சமயத்தில் முதன்மை பெற வில்லை என்று நினைத்து அதற்காகச் சமயத்தை வளர்க்காது, தன்னால் இயன்ற ஆக்கப்பணிகளைச் செய்யாது, ஒருவன் வாளாவிருந்து விடக்கூடாது.

நீரளவே ஆகுமாம் நீராம்பல்:

இவ்வாறு மனம் வேறுபட்டுப் பிணங்கிவிற்றற்கு மக்கள் பால் ஏதோ மனத்தளவிலே குற்றம் இருப்பதாகத் தெரிகிறது. விருப்பு வெறுப்பை மனத்துருவாகக் கொண்டு செயல் படுவது பெருமளவில், நாளடைவில் நம்மைநாம் சேதப் படுத்திக்கொள்வதாகும். அவ்வாறே வாழ்ந்த ஒரு காரணத்தால் தான் நம்நாட்டுத்தத்துவஞானி, டாக்டர் இராதாகிருஷ்ணனும் நம்சமயத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. குளத்தில் நீர்மட்டம் உயர உயர தாமரை அல்லி ஆம்பல் போன்றனவும் உயரும். அதுபோல மனத்தளவே நின்ற பிணக்குக்குரிய பிரச்சினைகள் வளரவளர சைவத்தில் ஒற்றுமையின்மை வளரும்; சைவம் குலையும். சைவம் குலைந்தால் இப்போதுசைவர்களாக வுள்ளவர்கள் வேறுபல சமயங்களில் புகுவர் அல்லது அவர்கள் பலவேறு சமயங்களைத் தோற்று விக்க நேரும். இங்கிலையில் சைவம் நீண்டகாலம் சிறப்பாக

இருக்குமா? சைவம் என்ற தாய்ச்சமயம் தான் நம்நாட்டில் தழைக்க வேண்டும். நம் பிற்றோன்றல்கள் அத்தனைப் பேரும் நம் சைவ சமயத்தையே பின்பற்றி வாழ்ந்து பெரு நிலை யடைய வேண்டும் என்பதே நாம் எல்லோரும் எப் போதும் விரும்புகிற அவா ஆகும்.

சாதிப்பிரச்சினையா!

சுந்தரர் அப்பர் போன்ற சிவனடியார்கள் மனங்கரவாப் பெற்றியராய் எல்லாக் குலத்தினரையும் போற்றி மனப் பிசுக்குப் போக்கி உய்வு பெற்றார்கள். ஆனல் அப்பண்பாடு நாளடைவில் குறைந்து விட்டதோ எனச் சிலர் இன்று ஐயுறுகிறார்கள். சைவத்தில் சிவாசாரியார்களும் வேளாளர் களும் பங்குபெறுவது போல மற்ற உழவர்களும் நளையர் களும் பங்குபெற்று சமயத்தை வலுப் படுத்துகின்றனரா? அவர்கள் சமுதாயத்திலிருந்து இயற்கையாகவோ செயற்கை யாகவோ விலகிச் சென்றுவிடுகிறார்கள். இறைவன் உழவன் போலவும் நளையன் போலவும் உருக்கொண்டு வந்து திருவிளையாடல் புரிந்ததைக் கச்சியப்பமுனிவரும் மணிவாசகரும், பரஞ்சோதி முனிவரும் பாவுகின்றார்கள். அத்தகைய பெருமையுடைய பெருமக்களும் நம்மில் கலந்து நம்சமயத்தைவலுப் படுத்தினல் அதனினும் பெருமையோ பேறோ வேறு நமக்கு உண்டா? ஆனல் அவர்கள் தங்கள் விருப்பம்போல மதம்மாறித் தாய்ச்சமயத்தைப் புறக்கணிக் கிறார்கள். அவர்கள் தம் சமயத்தைப்பற்றி அறியாதவர் களாக இருந்தால் சமயநலனைப் போற்றியும், அவர்கள் நலனைக்கருதியும் சைவர்கள் அவர்கள் இருக்கையிலேயே சென்று அறிவுறுத்தும் மனப் பண்பாட்டை வளர்த்துக் கொள்ளவேண்டும். “அறிந்தோர்கள் அறியாதோர்க்கு அறிவுறுத்துங்கள், அறியாதோர் அறிய முயலுங்கள்” என்ற கருத்தடிப்படையில் சைவர்கள் ஒருவர்க்கொருவர் சமயநலனைப் பரிமாறிக் கொள்வார்களாக. பாமரர்க்கும் சைவத்தில் இடமுண்டு. திருக்கடவூர் உய்யவந்த தேவ

நாயனார் என்னும் திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் ஆட்டு வாணியக்குலத்தில் தோன்றியவர். திருநாளைப்போவார் என்னும் சிவனடியார் புலையர் குலத்தில் தோன்றியவர். இவர்கள் போலப் பல அடியார்களும் சிறப்பாகப் போற்றப் பெறுகிற சைவத்தில் எல்லாமக்களும் ஆர்வத்தோடு ஈடுபட்டுப் பெருக வாழ்வதாகக் காணோம். சமயசாத்திர அறிவில் தேர்ச்சி பெற்றவர்களாக எல்லோரும் விளங்கவேண்டும். அப்போது தான் ஒருவர்க் கொருவர் சமயத்தின் பெருமையைப் பரிமாறிக்கொண்டு உணரமுடியும். ஆனால் இன்று பலதரப் பட்டபிரிவினர் சமய அறிவில்லாமல் தாய்ச்சமயத்தையே புறக்கணிக்கிறநிலையில் திரிந்து காணப்படுகிறார்கள். இதனால் சைவம் நிலைதளராதா? என்ற வினவிற்கு இனியும் சைவ வுலகம் விடைகாண முயலாது வாளா விருக்கக்கூடாது.

II. முன்னேற்றப் பாதையில் ஆக்கப்பணிகள் : ஊர்தோறும் சைவக் குருளைகள் கழகம்: (Saiva youths union)

என்றைக்கும் ஒரு கொள்கையைப்பரப்ப கழகங்கள், பத்திரிகைகள், சினிமாக்கள், பள்ளிக்கூடங்கள் போன்றன இன்றியமையாத உறுப்புக்களாக இடம் பெறுவன. சமயக் கருத்துக்களைப் பரப்பவும், சமய மக்களிடையே ஒற்று மையை வளர்க்கவும், பலபத்திரிகைகள் இல்லையென்றாலும் சிலவாவது இருக்கின்றன. அவ்வப்போது சைவக்கதைகளைத் (அடியார் வரலாறுகளை) திரைப்படக்காரர்கள் திரைப்படங் களாகவும் எடுத்துச் சைவத்தினை வளர்க்கின்றனர். ஆனாலும் ஒவ்வொரு ஊரிலும் சைவப் பெருமக்கள் சமயவளர்ச்சிக் கெனக்கூடிக் கழகங்கள் அமைத்துள்ளனரா? பட்டிதொட்டி களிலும் அவை அமைக்கப்பட்டுள்ளனவா? அக்கழகங்களில் ஆடவரும், பெண்டிரும், முதியவரும், இளைஞரும், செல்வர் களும் ஏழைகளும் எல்லோரும் ஈடுபடுகின்றனரா? கழகங் கள் உயிரோட்டமுடையனவாக ஒவ்வொருவராலும் விரும் பப்படுவதாகச் செயல்படுகின்றனவா? என்ற தொடர்

கேள்விகளுக்கு உடனடியாக உரிய விடைகளை நாம் காண வேண்டும். இல்லையென்றால் இளைஞர்களும், பெற்றோர்களும், கலைஞர்களும், எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் ஓவியர்களும், இசைவாணர்களும் எல்லோரும் சேர்ந்து சைவக் குருளையர்கழகங்களை நிலையாக அமைப்பதில் ஈடுபடுவார்களாக. ஆங்காங்குள்ள சைவமெய்யன்பர்கள் ஊக்கங்காட்டி ஆக்கம் காண்பார்களாக! அவ்வாறு கழகங்கள் தோற்றுவிப்பதில் நேரும் இடையூறுகளைப் பொருளாகக் கருதித்தளராது செயற்கரிய இவ்வினையைச் செய்து சாதித்துத்தரும் படி சைவஉலகம் ஒவ்வொருவரையும் வேண்டிநிற்கிறது.

சைவக்குருளையர் கழகத்தின் சிறப்பு:

குருளை என்பது வீரம் மிக்க புலிக்குட்டிகளுக்குப் பெயர். சைவக்குருளை என்பது வீரம் மிக்க சைவர்களைக் குறிக்கும். அவர்கள் தமக்கென முயலாதவர்கள். பிறர்க்கென முயலும் பெற்றியர்கள். சைவத்தின் பெருமையை நிலைநாட்டி வெற்றி காண்பவர்கள். சிறந்த கல்வி ஆற்றல் உடையவர்கள். செல்வந்தர்களும் இதில் பெரும் பங்குடையவர்களாக இருப்பர். அவர்கள் புலிக்குட்டிகளைப் போல ஊக்கத்தோடும் வீரத்தோடும் செயல் படுபவர்கள். அவர்களுக்குச் சைவக் குருளைகள் என்ற பெயர் வழங்கப்படும்.

சைவக் குருளைகளின் கைகோள்கள்:

சைவக் குருளைகள் பள்ளிப்பாடங்களிலன்றித் திருமுறைகளிலும் ஊக்கம் காட்டி முதல்நிலையில் தேர்ச்சி பெறுபவர்களாகவும், ஆர்வமுடையவர்களாகவும் விளங்க வேண்டும். நாடகக்கலை, பேச்சுக்கலை, எழுத்துக்கலை போன்ற கலைப் பிரிவுகளுள் தமக்கென ஒரு தனி இடத்தைத் தேர்ந்து கொள்ளும் திறலர்களாகப் பிறக்கவேண்டும். சமயக் கருத்துக்களைப் பலர்காண நாடக வாயிலாக அழகுற நடித்துக் காட்டும் பெருமை உடையவர்களாக இருக்கவேண்டும், பல

மொழிப் பயிற்சியும் தாய்மொழிப்பற்றும் நிரம்பியவர்களாகவும் இருத்தல் வேண்டும். கலை ஆர்வம் உடையவர்களை ஆதரிக்கும் பண்பினராயிருத்தல் வேண்டும். இன்னும் பல போற்றற்குரிய பண்புகளையும் அவர்கள் தமக்கேயுரியனவாக ஆக்கிக்கொண்டு ஒல்லும்வகையான் சைவத்தை வளர்ப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

சேர வாரும் செல்வர்களே !

சைவத்தில் சிவபெருமானே ஒப்பிலாச்செல்வன்; அவனைப் பூசிக்கும் அடியார்களும் செல்வர்களாவர் என்பதனாலே சைவமே செல்வத்தால் இயன்றது. எனவே பொருட்செல்வம் நிறைந்த சிவனடியார்களும் சைவத்திற்கு இன்றியமையாதவர்கள். சிவநெறி வளர்ச்சிக்கெனப் பண்டைச் சான்றோர்கள் செல்வத்தையும் உடலையு : இன்னும் உயிரையும் துச்சமாக மதித்தனர். அவர்களுக்கு ஈகையின் ஆக்கத்தைப் பற்றியோ, சைவவளர்ச்சிக்கு ஈத்துவக்கும் இன்பத்தைப் பற்றியோ சொல்ல வேண்டா.

சைவக்கலைஞர்களைத் தம் குடும்பத்தினர்போல எண்ணி அவர்களைச் சிறப்புச் செய்யும் பெருமை யுடையவர்களாக எல்லாச் செல்வர்களும் விளங்கவேண்டும். செல்வமும் அதிகாரமும் படைத்த பெரியோர்கள் சைவர்களை, சைவ இளைஞர்களை ஆதரித்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழி வகை செய்து காக்கவேண்டும். சமயநிறுவனங்களின் பொருள்களைப் பாழடிப்பவர்களை அவர்கள் தடுத்து நிறுத்தவேண்டும். அப்போதுதான் சைவம் தழைக்க முடியும்.

முடிவுரை

"சைவத்தில் உலகாயதம் ஊடுருவிவிட்டது. சைவ வைதீக நெறி சிறிது தளர்ச்சி அடைந்துவிட்டது" என்ற கருத்தை எல்லோரும் உணர்கிறார்கள். மக்களிடத்தில்

சைவத்தமிழ்ப் புலமை குறைந்து விட்டது. எனவே சமயப் பற்றும் பல சூழ்நிலைகள் காரணமாகக் குறைந்துவிட்டது. இங்கிலையில் அரசர்களும் ஈடுபட்டு வளர்த்துத் தந்த தங்கரிலாத சைவ சமயம் இன்று பலசமயங்களுள் ஒன்றாகத்தான் கருதப்படுகிறது. இதன் பெருமையை உலகறிய முடியாதபடி பலசூழ்நிலைகள் அமைந்துவிட்டன. இதற்குரிய காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து சிந்திக்கும் போது அளவற்ற அச்சமும் துன்பமும் உண்டாகின்றன. கையறு நிலையோடு அவலக்குறிப்புயதோன்றும். பிறசமயத்தவர்கள் சடுதியில் முன்னேறிச்செல்லும்போது நாம் மட்டும் முன்னிருந்தபடியே பூசலிட்டுக்கொண்டு கிடக்கிறோமே என்று நினைத்தபோது தனிமை மேலோங்கியது. அங்கிலையில் "சைவா ஓலம்! சைவமே ஓலம்!" எனவாய் இரைந்து அலறத்தோன்றியது. இதற்கெல்லாம் காரணம் பிறரும் நம்மவர்களுமே ஆகும். பிறர் இடம், காலம் முதலியனவற்றைப் பயன்படுத்திக்கொண்டு டலர் காண முன்னேறிச் செலகிறார்கள். அவர்களைப் போல முன்னேற முடியாததினால் சைவத்திலும் உயர்வு தாழ்வு கற்பிக்க முயலுகின்றனர் ஒருசிலர். நாம் மொழிப் பூசலுக்கு இடங்கொடுக்கலாகாது. திருமுறைகள் திருக்கோயில்களில் இடம்பெறுவது தான் சிறப்பு. சிவாசாரியார்கள் சிறப்புற அவைகளை ஓதும்படி நாம் கேட்டுக்கொள்வோம். அவர்களும் இக்கொள்கைக்கு முரணுபவர்கள் அல்லர் என்பதை நாம் உணரவேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலவாயினும் உள்ளது சிறத்தல் என்ற நெறிப்படி சிவாசாரியார்களையே சிவனைத் தொட்டுப் பூசை செய்ய நாம் அவர்களை அப்படியே விட்டுவிட வேண்டும். சாதி வேறுபாடு என்பது உயர்வு தாழ்வு அடிப்படையில் அமைதலாகாது. மேலும் சாதிவெறியும் காழ்ப்பும் யாண்டும் இடம்பெறலாகாது. எல்லாச்சாதியினரும் சிவனடியார்களாகவே கருதப்படவேண்டும். அப்போதுதான் ஒருவர் பெருமையை ஒருவர் உணர முடியும். இங்கிலையில் இளைஞர்கள் தொடங்கி முதியவர்கள் ஈறாக எல்லாமக்களும் ஆண்

களும் பெண்களுமாக சமயத்துறையில் ஈடுபாடுடையவர்களாக இருத்தல் வேண்டும். அங்ஙனம் அவர்கள் ஒருங்கியைந்து வாழ ஊர்தோறும் கழகங்கள் அமைக்கப்பெறுதல் வேண்டும். அவர்கள் சிறுமைபெருமை பாராட்டாது உடல் வருத்தம்பாராது சமயப் பணியில் ஈடுபடும் சைவக்குருளைகளாக இருத்தல் வேண்டும். அவ்விழுமியோரைக்காத்து ஆதரிக்கும் பொறுப்பினைச் செல்வர்களும் அதிகாரமுடைய அதிகாரிகளும் எடுத்துக்கொண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அந்நிலையிலேதான் சைவம் ஒருபொற்காலத்தைக் காணாவிட்டாலும், ஓலத்திற்குரிய நிலையில் இராது.

புண்ணியர் உலகில் வாழ்க! புலஞ்செறு நோன்பு வாழ்க!
பெண்ணொரு பாகன் பூசை பேணிவாழ் அடியார் வாழ்க!
கண்ணுதல் ஒருவன் சாந்த கற்புடைச் சைவம் வாழ்க!
அண்ணவல் லமன்சீர் கேட்கும் ஆதர வாளர் வாழ்க!

பொருவரும் பூதி வாழ்க! பூதியை அணிவோர் வாழ்க!
திருவளர் கண்டி வாழ்க! சாந்தஅஞ் செழுத்தும் வாழ்க!
குருவருள் வாழ்க! மெய்யைக் கூறுநா வோர்கள் வாழ்க!
வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க வாழ்க.

"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

வாழ்க சைவம்! வாழ்க சைவர்!!

சோத்திரப் பகுதி

நோயுளார் வாயுளான்.

(நெல்லை. R. S. இராமலிங்கம்)

உலகெலாம் படைத்த இறைவன் உயிர்கள்பால் மிகுந்த கருணை உள்ளவன். 'கருப்பையுள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும விருப்பமுற்று அமுதளிக்கும் மெய்யன். நாடுந்தாயினும் நல்லவன். பசிவேளையறிந்து பால் ஊட்டுவாள் தாய. ஆனல் தாயினுஞ் சிறந்த தயா

பரனுகிய இறைவன் இன்னவேளை என்பதின்றி எப்பொழுதும் இன்னருள் சுரக்கும் இயல்புடையவன். அவன் ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் அளவிலாத பெருமை வாய்ந்தது. அவன்பால் அடியவர் பலரும் அளவிலாத அன்பு செலுத்தி அழிவிலாத பேரின்பத்தை அடைந்தார்கள்.

எனவே, வாழ்வில் இன்பம் பெறவும், நம் வினைகள் நீங்கவும் அவன் திருவடியில் மனம்வைத்து என்றும் அழியா இன்பத்தைப் பெறவேண்டும். தேனும் இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமானை இடைவிடாது தியானித்து வந்தால் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரை சேரலாம்.

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
> இறைவ னடிசேரா தார்." (திருக்குறள்)

உலக மக்கள் இவ்வுண்மையை உணராமல், சில சமயம் இறைவனை நினைந்தும், சில சமயம் நினையாமலும் இருக்கின்றனர். அளவிலாத செல்வத்தைத் தேடவும், சுக போகங்களை அனுபவிக்கவும் காலத்தைப் போக்கி, நமக்கு நல்வாழ்வளிக்கும் வள்ளலை மறந்து வாழ்கின்றனர். ஆயினும் வாழ்விலே சில இன்னல்கள் வரும்போதும், நோயினுல் நலியும்போதும் "தெய்வமே! தெய்வமே!" என்று தம்மை மறந்து தியானிக்கிருர்கள்! தாங்க முடியாத நோயினுல் தளர்வுறும்போது "கடவுளே! கடவுளே!" என்று கதறுவது உலக இயல்பாக இருக்கிறது. அணுவுக்கு அணுவாயும், அண்டங்களையெல்லாம் கடந்தவனுயும் உள்ள இறைவன் திருநாமத்தை அப்பொழுதுதான் தவருமல் மக்கள் சொல்லுகிருர்கள்!

இறைவன் பெருமையை இன்தமிழ்ச் சொற்களால் விளக்கவந்த ஞானசம்பந்தர்,

> "நுண்ணியான் மிகப் பெரியான்
> நோயுளார் வாயுளான்"

என்று அருளிச் செய்கிறார். நுண்ணிய நூலுணர்வோரும் எண்ணித் துதிக்கும் புண்ணிய மூர்த்தி அணுவுக்குள் அணுவாய் இருக்கிறான்; அதனால் "நுண்ணியான்" என்றும், எழுண்டத்துக்கும் அப்பாலாய், எங்குமாய் நிறைந்து விளங்குவதால், "மிகப் பெரியான்" என்றும், தீராநோய் தீர்த்தருளும் பெருமான் ஆதலால் "நோயுளார் வாயுளான்" என்றும் சொன்னயம்படச் சுருங்கச் சொல்லும் சம்பந்தரின் 'திருநெறிய தமிழ்' சிந்திப்பதற்கு அரிய சிறப்பு வாய்ந்தது. இவ்வுலக மக்கள் எத்தனையோ மொழிகளைப் பேசுகின்றனர். ஆயினும் "தமிழ் மொழிபோல் இனிதாவது எங்குங் காணோம்!" என்று பலமொழியும் அறிந்த பாரதியார் பாராட்டும் உண்மையைச் சம்பந்தர் திருவாக்கில் சிறப்பாகக் காணலாம்.

சிவபெருமானின் திருக்குமாரர் என்று சொல்லப்படும் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர் சிலர் நெருப்பு வைத்தார்கள். அதை அறிந்த சம்பந்தர் தம் திருவாய் திறந்து,

"செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்றருள் செய்யெனப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

என்று பாடினார். திருநெறிய தமிழ், தெய்வத்தை மறந்த தமிழ் மன்னனைத் தாக்கியது. அவன் வெப்பு நோயால் பீடிக்கப்பட்டான். வைத்தியர்கள் வந்தனர்; மருந்து தந்தனர்; குணம் இல்லை கதறினான் மன்னன். அவனது தேவியார் மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் அவனருகில் வந்து "இந்நோய் ஞானசம்பந்தருக்கு இழைத்த தீங்கால் வந்தது; அவர் இங்கு வரின் நோய் தீர்வடையும்; நாம் உய்யலாம்" என்று மெதுவாகக் கூறினார்கள். மன்னனும் தன்னை மறந்து சம்பந்தர் பெருமானை வரவழைக்க வழியுண்டேல் வரவழையுங்கள்" என்று மறுமொழி தந்தான்.

சமணர்கள் சார்பில் இருந்த மன்னன் மாளிகைக்கு சம்பந்தர் வருவதற்கு மறுப்பாரோ என்று எண்ணி மன்னவன் அவ்விதஞ் சொன்னான். ஆனால் அரசியார் அழைப்பிற்கிணங்கி சம்பந்தர் வந்தார். "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகம் பாடி, வெப்பு நோய் தீர தம் திருக்கையால் வெண்ணீறு அணிவித்தார். தீராநோய் தீர்ந்தது. மந்திரமும் தந்திரமும் மருந்தும் எல்லாம் நீறு! என்றும "பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு" என்றும் பாடி, மேனியில் நீறு பூசவும் வெப்பு நோய் மறைந்தது. நோய் நீங்கப் பெற்ற மன்னன் சைவ சமயத்திற் சேர்ந்து சம்பந்தரை வழிபட்டான்! எனவே 'நோயுளார் வாயுளான்' என்று தாம் பாடிய திருவாக்கிற்குத் தாமே இலக்காக விளங்கினார் திருஞான சம்பந்தர்!

"காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்றபடி தம் பிள்ளைகளைத் தாய்மார்கள் மிகவும் அருமையாக வளர்க்கிறார்கள். எவ்வளவு பொன் கொடுத்தாலும் அவர்களுக்குள்ள ஒரு பிள்ளையைப் பிறர்க்குத் தரமாட்டார்கள் விதிவசத்தால் ஒரு குழந்தை இறக்க நேருமாயின் அவர்கள் படுந்துயருக்கு அளவேயில்லை." கும்பிட்ட தெய்வமெல்லாங் கல்லாச்சோ! தெய்வமே! என் பிள்ளையை எழுப்பித்தராயோ? என்று ஏங்கித் துடிக்கிறார்கள் பாவம்! ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? என்ற நினைவு அவர்களுக்கு அப்பொழுது வருவதில்லை.

இவ்விதமே நோய்வாய்ப்பட்டவர் அனைவரும் இறைவனை நினைந்து உருகுகிறார்கள். வைத்திய முறையில் குணம் பெறாத மக்கள் "உன் சந்நிதிக்கு வருகிறேன்; என்னைக் காப்பாற்று" என்று வழிபடுகிறார்கள். அப்பொழுதான் பல பிரார்த்தனைகள் அவர்கள் உள்ளத்தில் எழுகின்றன, செந்தில் முருகனையும், பழநிமலை வேலனையும், திருப்பதிப் பெருமாளையும் தியானித்து 'பொன்னும் பொருளும் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்கிறார்கள். ஆகவே நோயுளார் வாயு

ளான்" என்பது, கருதும் அடியார்கள் கோடி குறை கூறி னும் முனிய அறியாத பெருமானின் பெருமையைப் பேசும் இன்தமிழ்ச் சொற்களால் அமைந்துள்ளது என்பது சிந்திக்கத்தக்கது.

அறியாச் சிறு பருவத்தில் அம்பிகையின் ஞானப்பால் உண்டு சகல ஞானமும் கைவரப் பெற்ற சம்பந்தர் பெருமைகளை யெலாம் திருமயிலை நகரில் சிவநேசர் கேள்வி யுற்றார். நாளும் இன்னிசையால் தமிழ் பாடிப் பொற் றாளம்பெற்ற பெருமையையும் முதல்வன் அருளால் முத்துச் சிவிகை பெற்ற மகிமையையும், திருமறைக் காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடிய சிறப்பையும், திருநீற்றுப் பதிகம்பாடி மன்னனது வெப்புநோய் தீர்த்த அருட்செயலையும் அன்பர்கள் சொல்ல ஆர்வமுடன் கேட்டார் சிவநேசர்! தமக்குரிய செல்வமெலாம் "சம்பந் தரது உடைமை" என்று கருதினார். அவர் பெருமை யைப் பேசிவரும் அன்பர்களுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தார். இவ்விதம் நாள்தோறும் சம்பந் தரையே வழிபட்டுச் சிறப்புற்று வரும் நாளில் ஒருநாள் அவரது ஓரே மகளை அரவந் தீண்டியது. நெருப்பிலே பட்ட மலர்போல் பூம்பாவை என்னும் பெயர் பெற்ற அம் மங்கை சுருண்டு விழுந்தாள். தோழிப் பெண்கள் அச் சிறுமியைக் கன்னிமாடத்திற்குக் கொண்டு வந்தனர். உற்றாரும் உறவினரும் சிவநேசரும் பார்த்து "ஓ" வென்று அலறினார்கள்.

"என் பிள்ளையின் வெய்ய விடந் தீர்ப்பார்க்கு
என் பொருளையெல்லாம் தருவேன்"

என்று பறைசாற்றினார். பெயர் பெற்ற வைத்தியர்களும் மந்திரத் தொழில் வல்லவர்களும் வந்து மருந்தாலும் மந்தி ரத்தாலும் குணப்படுத்த முயன்றனர். ஒருவராலும் விடத்தைத் தணிக்க முடியவில்லை. கொடிய விடந் தலைக் கேறியது.

"இனிப் பிழைக்க மாட்டாள்; இது விதி!"

என்று அனைவரும் அன்றனர். உயிர் பிரியும் எல்லையில் உற்றார் உறவினர் உடல் மேல் விழுந்து கடல்போற்குமுறி

அழுதனர். "ஐயோ! தெய்வமே! என்று அலறினர்கள். சிவநேசர் என் செய்வார் பாவம்! "என் செல்வ மகளை எவ்வாறு பிரிவேன்" என்று ஏங்கித் துடித்தார்! மூன்று நாள்கள் வரை வைத்திருந்து பார்த்தார். ஒன்றும் முடியாமல் இறுதியில் தாம் வழிபடுந் தெய்வமாகிய திருஞான சம்பந்தரைத் தியானித்தார். "ஆம்; என் குழந்தை உயிர் பெற்று எழவேண்டுமானுல் எம்பிரான் சம்பந்தர் வர வேண்டும்! அவர் வரும்வரை உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் சேகரித்து வைத்துக் காப்பேன்" என்று மனந்துணிந்து அவ்விதமே செய்தார். எலும்பையும் சாம்பரையும் மண்குடத்தில் நிரப்பிக் காழியர்கோன் வரும்வரை கன்னிமாடத்தில் வைத்துக் காத்தார். திருவொற்றியூரிலிருந்து சம்பந்தரும் வந்தார். சிறந்த முறையில் வரவேற்பு செய்து தம் குறையினை முறையிட்டுத் திருவடியைத் தொழுதார் சிவநேசர்! அவர்பால் அருள் நோக்கங்கொண்ட சம்பந்தர் நோயுளார் வாயுளானுகிய கபாலியையும் கற்பகத்தையும் கண்ணுரக் கண்டு வழிபட்டு "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிப்பரவினுர்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர் முன்வருகென உரைப்பார்

அந்நிலையில் அனைவருங் கண்டு அதிசயிக்க உயிர்பெற்று அழகிய வடிவுடன் எழுந்தாள் அங்கம் பூம்பாவை! மண்ணவரும் விண்ணவரும் கண்டு மகிழ்ந்தனர். இதனுல் அவனது திருநாமஞ் சொல்லி வழிபட்டால் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம் என்பது இனிது விளங்குமன்றோ!

"சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்பதைச் சிறு பருவத்தில் உணராத மருணீக்கியார் சமண சமயத்தில் சேர்ந்திருந்தபோது வயிற்றில் சூலை நோய் வந்தது. அந்நோயை அங்கு யாராலும் குணப்படுத்த முடியாமல்,

அருமைத் தமக்கையாரிடம் வந்து அடிபணிந்து அவரோடு திருவதிகை ஆலயத்திற்குச் சென்று வீரட்டானப் பெருமானை வலம் வந்து வணங்கி "கூற்றாயினவாறு விலக்ககிலீர்!" என்னும் திருப்பதிகம் அவர் பாடினார்.

தோற்றாது என்வயிற்றினகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே!

என்று கைகூப்பித்தொழுது கண்ணீர் வடிக்கவும், அவரது தீராத நோய் தீர்ந்தது; செஞ்சொற் பதிகம் பாடிய சிறப்பினால் நாவுக்கரசர் என்ற நாமமும் பெற்றார் என்ற வரலாறு யாவரும் அறிந்ததே.

இவ்விதமே "சங்கிலியாரை விட்டுப் பிரியேன்" என்று சத்தியஞ் செய்ததை மறந்து அவ்வூரைவிட்டு அகன்றதால், கண்களை இழந்த நம்பியாரூரர் கதறியழுதார்.

முகத்திற் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்வேன்!
முக்கணா! முறையோ? மறையோதி!

என்றெல்லாம் பலவாறு புலம்பிப் பதிகங்கள் பாடி பரமனை வேண்ட காஞ்சியில் ஒரு கண்ணும் திருவாரூரில் மற்றொரு கண்ணும் பெற்ற வரலாறும் இங்கு சிந்திக்கத் தக்கது. இன்னனைய வரலாறுகள் எல்லாம் இறைவன் 'நோயுளார் வாயுளான்' என்பதை நன்கு விளக்குவனவாகும்.

ஆகவே, தீரா நோய் தீர்த்து அருளும் பெருமானை, வினைதீர்க்கும் விமலனை, 'நோயுளார் வாயுளான்' என்று சம்பந்தர் போற்றும் சிவபெருமானை ஒரு கணமும் மறவாது வணங்கிச் சிறப்புற்று வாழ்வோமாக.

நுண்ணியான் மிகப்பெரியான் நோயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான் நம் தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங் குடியான் செஞ்சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான் கணபதீச் சரத்தானே!

திருச்சிற்றம்பலம்.

திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு

அவர்கள் மனைவியார் மறைவு.

சமாஜ உபதலைவராகவும், செயலாளராகவும் பல காலம் பணியாற்றிய திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் மனைவியார் அலர்மேலு அம்மையார் 23-4-70 அன்று கால மானார்கள் என்ற செய்தியை மிக்க வருத்தத்தோடு அன்பர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்கள் மணி விழா 16-10-66 இல் நடந்தது. இவ்வம்மையார் தம் கணவ ருடைய பொதுப்பணிகளுக் கெல்லாம் துணையாக நின்று குடும்ப காரியத்தைச் செவ்வனே நடத்தி வந்தார்கள். ஆடவர்கள் பொதுப்பணியில் இறங்கிப் பல காரியங்கள் செய்ய முடிவதெல்லாம், வீட்டுக் காரியம் செம்மையாகவே இயங்கினால்தான் சாத்தியம். அந்த முறையில் இவர்கள் நாயுடு அவர்கள் வெளியிலே பல காரியங்கள் செய்த போதெல்லாம் வீட்டுக் காரியங்களை நன் முறையில் நடத்தி வந்தார்கள். வீட்டில் குழப்பம் இருந்தால் யாரும் வெளிக் காரியங்களில் பெரும் சாதனை செய்ய முடியாது என்பது அனைவரும் அறிந்தது.

இவர்களுக்கு மூன்று பெண்களும் இரு பிள்ளைகளும் உள்ளனர். இரண்டாம் புதல்வர் எம். டி. பரீட்சை எழுதி டாக்டராக இருப்பவர்.

ஒரு மாத காலமாக இவர்களுக்கு வயிற்றில் வலி இருந்து இருபது நாள் கழித்துத்தான் அது பித்தாசயத் தில் புற்று நோய் என்று வைத்தியர்கள் கண்டறிந்தார்கள். வைத்தியம் செய்ய முடியாது என்று கைவிட்டு விட்டார்கள். பத்து நாள் வலியினால் மிகுந்த வேதனைப்பட்டார்கள். முடிவில் இறைவன் இந்த ஆன்மாவுக்கு இளைப்பாற்றுதல் வேண்டித் தமது திருவடியில் சேர்த்துக் கொண்டான். ஈமக் கிரியைகள் இவர் சொந்த ஊராகிய திருவாமூரை யடுத்த, கிழக்கு மருதூரில் 23-4-70 இல் நடந்தன.

அம்மையார் ஆன்மாவுக்கு இறைவன் பேரானந்தப் பெருவாழ்வு அளிப்பானாக. நண்பர் நாராயணசாமி அவர்கள் இளமை முதல் தம் வாழ்க்கையில் பல வகைச் சமயப்பணி களில் ஈடுபட்டிருந்தவர். தமது திருமணத்திலேயே திரு. வி. கல்யாணசுந்தரனார் தலைமையில் சைவ சமாஜச் சிறப்பு மகாநாடொன்றை நடத்தினார்கள். வைணவ நூல்களிலும் இவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. முதிர்ந்த பிராயத்தில் ஆண்டவன் சோதனை தாங்குவதற்கரியது. நல்லோர் கூட் டுறவிலும் நூல்களின் பயிற்சியிலும் ஆலய தரிசனத்திலுமே தம்முடைய பொழுதைப் போக்குகின்ற இப்பெரியாருக்கும் குடும்பத்தாருக்கும் மனம் நிறைந்த பேர் ஆறுதலை அளிக்கு மாறு, சமாஜத்தோடு நாமும் சேர்ந்து எல்லாம் வல்ல எம் பெருமானாகிய சிவபரம்பொருளை வேண்டிக் கொள் கின்றோம். (ஆசிரியர்)

ஓர் அறிவிப்பு

நம் சமாஜ ஆங்கில முத்திங்களிதழ் "சைவ சித்தாந்தா"வின் முன்னாள் ஆசிரியர் இராவ் சாகிப் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் காசிப்பல்கலைக் கழகத்திலாற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய "Relevance of Saiva Siddanta" எனும் சிறந்த ஆங்கில நூல் (அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு) உங்களுக்கு வேண்டுமா? உடனே சமாஜச் செயலாளருக்கு எழுதுங் கள். விலை ரூ 6-66. தபாற்கூலிவேறு.

கல்லா லடித்தாரை யாட்கொண்டு மென்மலரை
வில்லா லடித்தானை வேவித்துப் — பொல்லாத
பொங்கரவைக் கொள்வான் பொதுவில் நடுநிலைக்குச்
சங்கரனே சாலுங் கரி.

புலவர், இளமணி தா. மு. சுப்பிரமணியன்

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதல் சமயக் கட்டளையின்படி சமாஜச் சார்பில் 7-5-70ல் மயிலாப்பூர் ஸ்ரீ வெள்ளீசுவரர் ஆலயத்தில் ' மங்கையர்க் கரசியார் மாண்பு " என்பது பற்றி நெல்லை திரு. R. S. இராமலிங்கம் அவர்கள் விரிவுரையாற்றினார்கள். 8-5-70ல் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் திரு. பெ. திருஞானசம்பந்தம், எம் ஏ., எல். டி. அவர்கள் "உமாபதி சிவம்" என்னும் பொருள் பற்றி விளக்கிப் பேசினார்கள்.

வைகாசித் திங்கள் சிறப்பு நாள்கள்

9	(28-5-70)	மூலம்—திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் விழா
do	do	—முருக நாயனார் விழா
do	do	—திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் விழா
do	do	—திருநீலநக்க நாயனார் விழா
19	(2-6-70)	பரணி—கழற்சிங்க நாயனார் விழா
25	(8-6-70)	பூசம்—நமிநந்தியடிகள் நாயனார் விழா
do	do	—சேக்கிழார் சுவாமிகள் விழா
26	(9-6-70)	ஆயிலியம்—சோமாசிமாற நாயனார் விழா

நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியா சாலையின் 44ஆவது ஆண்டு விழா 30-4-70 ல் காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி. அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. மா. கண்ணப்பன், M. A., B. T. அவர்கள் "கற்பனை" என்பது பற்றிப் பேசினார்கள்.

காஞ்சி மெய்கண்டார் கழகச்சார்பில் 13—4—70 ல் திருக்குமரகோட்டத் திருப்படி விழாவும், 17—4—70 24—4—70 ல் காமாட்சிகோயிலில் சித்திரை வெள்ளி வழிபாடுகளும், 20—4—70 ல் திருவேகம்பத்தில் உமாபதி சிவாசாரியார் விழாவும், 22—4—70 ல் கச்சித் திருவாவடுதுறை மடத்தில் சித்திரைச சுவாதித் திருநாளும், 30-4-70ல் திருவேகம்பத்தில் திருநாவுக்கரசு நாயனார் விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. புலவர் மாமணி திரு. வி. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள் முன்னின்று சமய விரிவுரைகளாற்றிச் சிறப்பித்தார்கள்.

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் நினைவு நாள் விழா 17 - 4 - 70 மாலை சைவப் பெரியார் ச. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ., வித்துவான் அம்பை இரா. சங்கரனுர் ஆகியோர் கதிரைவேற்பிள்ளை யவர்களின் வரலாற்றையும் பெருமைகளையும் பற்றிப் பேசினுர்கள்.

மாயூரம் ஸ்ரீ வல்லபை கணபதித் திருக்கோயிலில் குடமுழக்கு விழா 20-4-70 ஞாயிறன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது. மேலும் மாயூரம் ஸ்ரீ வீரப்ப சுவாமிகள் சமாதியாலயக் குடமுழுக்கு விழா 12-4-70 ஞாயிறு காலையிலும் அச்சுவாமிகளின் 42ஆம் ஆண்டுக் குருபூசை விழா 27-4-70 திங்கள் கிழமையன்றும் மிகச் சிறப்புற நிகழ்ந்தன.

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்க வைர விழா 25, 26, 27-4-70 ஆம் நாள்களில் திருமூலநாத சுவாமி ஆலயத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. சைவப் பெருமக்கள் பலர் பங்குகொண்டு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர். அச்சங்கத்தின் சமயத் தொண்டுகள் மேலும் சிறப்புற்றிலங்க எல்லாம் வல்ல இறைவனருள் புரிய வேண்டி வழுத்துகின்றோம்.

முத்தமிழ்மணி திரு. ஆ சாமிநாத முதலியார் (தலைமைத் தமிழாசிரியர், மஞ்சக்கொல்லை) அவர்கள் மலேசியாவில் பல இடங்களிலும் சமயப் பிரசாரம் செய்ய விரும்பி அங்குச் செல்லவிருக்கின்றுர்கள். அது கருதி ஒரு வழியனுப்பு விழா 2–5–70 மாலை மஞ்சச்கொல்லை குமரன் உயர் பள்ளியில் புலவர் திரு. ந ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பெருமக்கள் பலர் திரு. முதலியார் அவர்கள் தொண்டு சிறக்கப் பாராட்டியும் வாழ்த்தியும் பேசினர்.

தமிழகப் புலவர் குழுவின் 28ஆம் கூட்டம், கருத்தரங்கு, சான்றோர் குழு ஆகியவை கோவையில் 9-5-70 10-5-70 ஆம் நாள்களில் மிகச் சிறப்புற நிகழ்ந்தன. விஞ்ஞானப் பேரறிஞர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் முன்னின்று நன்முறையில் நடத்தினுர்கள்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.